மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : நான் ஏற்கனவே தெளிவு படுத்தினேன். கன்னியாகுமரி மாவட்டத்திற்கு நம்முடைய அரசு ஒதுக்கக் கூடியதில் 50 சத வீதம் விளவன்கோடு தாலுக்காவிற்குத்தான் கொடுக்கப் படுகிறது. எங்கள் தரப்பிலுள்ள உறுப்பினரிடமிருந்தும் ஒரு குற்றச்சாட்டு வந்தது. அங்கே கொடுக்கப்படுகிற அரிசியை நான்கு ரூபாய், ஐந்து ரூபாய்க்குக் கேரள எல்லையிலே கொடுத்துவிடுகிறார்கள் என்ற நிலைமை இருப்பதாகவும் எடுத்துச் சொல்லப்பட்டது. இன்றைக்கு நம்மிடத்திலிருக் கும் இருப்பின் அடிப்படையில், தேவைக்கேற்ப எந்த அளவிற்குக் கொடுக்க முடியுமோ, அது கொடுக்கப்படுகிறது. கொடுக்கக் கூடாது என் பது அல்ல இந்த அரசாங்கத்தின் நோக்கம். விளவன்கோடு தாலுக்கா விற்கு அரிசி கொடுக்க வேண்டும் என்ற பொறுப்பை நிறைவேற்றுகின்ற நேரத்தில் விளவன்கோடு தாலுக்காவைத் தாண்டி, இன்னும் மேற்படி தாலுக்காக்களுக்கு நியாயமாகக் கிடைக்க வேண்டிய அரிசி நம்முடைய எல்லையைத் தாண்டிவிடக் கூடாது என்பதிலேயும் இந்த அரசாங்கத் திற்கு மிகுந்த பொறுப்பு இருக்கிறது.

மண்வள ஆய்வு நிலையங்கள்

*340 வினா.—**திரு. வி. கே. கோதண்டராமன் :** மதிப்பிற்குரிய விவசாய அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தமிழ் நாட்டில் மண்வளப் பாதுகாப்புச் சோதனை நிலையங்கள் எங்கெங்கேயுள்ளன, ஜில்லாவாரியாக ?

(இ) அவை முறையே எந்தெந்த ஆண்டுகளில் ஆரம்பிக்கப்பட்டன ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :

(அ) and (இ) :தேவையான தகவல் பின்வருமாறு:—

	மாவட்டத்தின் பெயர்.	மண்வளப் பாதுகாப்பு ஆய்வுக் கூடங்கள் உள்ள இடங்கள்.	தொடங்கிய ஆண்டு.
	(1)	(2)	(3)
1	கோயம்புத்தூர் ..	வேளாண்மைக் கல்லூரி-ஆராய்ச்சி நிலையம், கோயம்புத்தூர்.	1956
2	தஞ்சாவூர் ..	வட்டார ஆராய்ச்சி நிலையம், ஆடுதுறை.	1960
3	திருநெல்வேலி ..	வட்டார ஆராய்ச்சி நிலையம், கோயில்பட்டி.	1963
4	தென்ஆர்க்காடு ..	கரும்பு ஆராய்ச்சி நிலையம், கடலூர்.	1965
5	மதுரை	வேளாண்மைக் கல்லூரி, மதுரை.	1966
6	வடஆர்க்காடு ..	கரும்பு ஆராய்ச்சித் துணை நிலையம், மேலாலத்தூர், குடியாத்தம்.	1966
7	செங்கற்பட்டு ..	அரசாங்க விதைப்பண்ணை, காஞ்சிபுரம்.	1966

திரு. வி. கே. கோதண்டராமன் : விவசாய அபிவிருத்திற்காக வேண்டி இந்த மண்வளப்பாதுகாப்பு மிக மிக அத்தியாவசியமானது அல்லவா ? மழைக்காலத்தில் வெள்ளத்தினால் மண்வளம் பாதிக்காமலிருக்க வேண்டி யதை முன்னிட்டாவது மேலும் அதிகப்படியான மண்வளப் பாதுகாப்பு நிலையங்களை ஏற்படுத்த அரசாங்கத்திற்கு உத்தேசமுண்டா ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : நான் குறிப்பிட்ட ஏழு இடங்கள் மட்டுமல்லாமல், ஆரூரான் ஷுகர் மில்ஸ் இருக்கும் வடபாதிமங்கலத்தி லும், இண்டோ-ஜெர்மன் திட்டத்தின்கீழ் உதகையிலும், ஆராய்ச்சி நிலைய மும், நான்கு மொபைல் டெஸ்டிங் யூனிட்களும் இருக்கின்றன. மேலும்,

1967 ஜூலை 14]

இராமநாதபுரம், திருச்சி, சேலம், தருமபுரி ஆகிய இடங்களிலும் படிப்படியாக ஆராய்ச்சி நிலையங்களை நிறுவுவதற்கு அரசாங்கம் முடிவு செய்திருக்கிறது.

குடியாத்தம் வட்டத்தில் கசிவு நீர் ஏரிகள்

* 341 வினா.—**திரு. வி. கே. கோதண்டராமன் :** மதிப்பிற்குரிய விவசாய அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) குடியாத்தம் தாலூக்காவில் Percolation tanks திட்டம் நடைபெறுகிறதா ?

(இ) ஆம் எனில்; எங்கெங்கே, அவற்றின் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :

(அ) ஆம்.

(இ) 1966–67, 1967–68-ம் ஆண்டுகளில் குடியாத்தம் தாலூகாக்களிலுள்ள கீழ்க்கண்ட கிராமங்களில் கசிவுநீர் ஏரிகளை தோண்டவும் புதுப்பிக்கவும் அரசு அனுமதி வழங்கியுள்ளது—

(1) செங்குன்றம்.

(2) கொண்ட சமுத்திரம்.

(3) சேத்துபண்டை.

(4) மூட்டாளம்.

செங்குன்றத்தில் (நெத்தான குட்டை) வேலை நடந்து வருகிறது. எஞ்சிய கிராமங்களிலும், ஏரிகளைத் தோண்டுவதற்கும் புதுப்பிப்பதற்கும், உரிய மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு வருகின்றன.

திரு. வி. கே. கோதண்டராமன் : மலைப் பிரதேசங்களில் பெரு மழை பெய்து, வெள்ளம் ஏற்பட்டு; காட்டாறுகளாக ஓடும்போது, அங்குள்ள நிலத்தின் மண்வளம் நாசமாவதோடு, விவசாயம் செய்திருந்தால் அதுவும் நாசமாகி, விவசாய அபிவிருத்தி பாதிக்கப்பட்டு, உணவு உற்பத்தி தடைபடுகிறது. குடியாத்தம் ஒரு பக்கத்தில் ஆந்திரத்தையும், இன்னொரு பக்கத்தில் மைசூரையும் எல்லைகளாகக் கொண்டுள்ள மலைப் பிரதேசம் நிறைந்த பகுதியாகும். ஆகவே, இதற்கு விசேஷ கவனம் செலுத்தி, இதுபோன்ற பெர்கொலேஷன் டாங்குகளை அதிகப்படியாக ஏற்பாடு செய்வதற்கு உடனடியாக உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : நான் ஆரம்பத்திலே குறிப்பிட்டதுபோல, அதற்கு வேண்டிய திட்டங்களை அரசு தீட்டி வருகிறது. அதற்காகத்தான் இப்பொழுது அந்த மண்ணையும் வண்டலையும் அடித்துக் கொண்டு போகாமலிருக்க, ஆங்காங்கு ஓடைக்கு எதிர்ப்புறங்களில் காட்டை அமைத்து அதன் மூலம் மண் அரிப்பதைத் தடுத்துக்கொண்டு வருகிறோம். மேலும் மத்திய அரசாங்கம் இதற்காக 15 சத வீதம் மானியமாகவும் 60 சதவீதம் கடனாகவும் அளிக்கிறார்கள். எஞ்சிய தொகையை மாநில அரசாங்கம் செலவு செய்து தேவையான இடங்களில் பெர்கொலேஷன் டாங்குகளை அமைக்கும்.

அரிசன நலப் பள்ளி ஆசியர்களுக்கு வீடுகள்

* 342 வினா.—**திரு. எஸ். சிவசுப்பிரமணியன் :** மதிப்பிற்குரிய அரிஜன நல செய்தித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1967–68-ல் தென் ஆர்க்காடு ஜில்லாவில் ஹரிஜன நல இலாக்காவின் கீழுள்ள ஹரிஜனநல பள்ளிகளில் வேலை செய்யும் ஆசிரியர்கள் ஆசிரியைகள் ஆகியவர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்கும் திட்டம் ஏதேனும் அரசாங்கத்தின் பரிசீலனையிலுள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரமென்ன ?